Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஆவணி 28உ ஆரம்பமானது (1889)

வெள்ளி தோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10.

[புத்-சுஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி௵ தைமீ ௧௯ உ வெள்ளிக்கிழமை (1 FEB. 1957) [இல-௪௧]

கோயிலாக்கண்டிச்

# சிவன் கோவில்

—:0:—

## புனருத்தாரணம் அவசியம் தேவை

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறைவிளங்கப்
பூதபரம்பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"
(சேக்கிழார்)

ஸ்ரீ செ. கோவிந்தசாமி அவர்கள்

இவ்விலங்கையானது பண்டை ஞான்று பல கோடி சிவலிங்கங்களையுடைய நாடாய் இருந்தது. இப்போது பௌத்தாலயங்கட்கு இருப்பிடமாக இருந்தாலும் சிலமுற்றுப் போன சிவாலயங்களாகிய திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், பொலனறுவைச் சிவாலயம் முதலான தலங்கள் புனருத்தாரணம் செய்யப்படுகின்றன. யாழ்ப்பாணப் பகுதிகளிலும் பல சிவன் கோயில்கள் இருந்ததாக அறியக்கிடக்கின்றது. அக்கோயில்களைப் பராமரித்தவர்கள் மறைந்து போகக் கோயில்களும் சிலமுற்றன. இப்படிச் சிலமுற்ற யாழ்ப்பாணச் சிவன் கோவில்களுள் மறவன்புலோ கோயிலாக்கண்டிச் சிவன் கோயிலும் ஒன்றாகும்.

இக்கோயில் புராதனமானது. கடற்கரைக்குச் சமீ…………

…………பத்தில் உள்ளது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் சீடரான ஸ்ரீமத் நாகமணிப்பிள்ளை அவர்களால் தாபிக்கப்பெற்று அவரே அதன் பரிபாலகராகக் கடமையாற்றி வந்தனர். இப்பொழுது பூசை முதலிய நியமங்கள் இல்லாமல் இருக்கின்றது. கட்டிடமும் சிதைவுற்றிருக்கின்கின்றது. இந்நிலைமையில் இக்கோயிலிருத்தல் மிகவும் வருந்த வேண்டியதொன்றாகும். ஆகையினாலே இக்கோயிற்றிருப்பணியைப் பூர்த்திபண்ணிக் கும்பாபிடேகம் செய்வது சைவ மக்கள் கடமையாகும்.

இத்தலப்பேரில் வரும் கண்டி என்றசொல் பொலிகண்டி (கந்தவனம்) கோயிலாக்கண்டி — மகாகண்டி என மூன்று வகைப்படும். இதனை முக்கண்டி யென்பர். இங்கு சுப்பிரமணியப் பெருமானும் எழுந்தருளித் திருவருள் பாலித்திருககின்றார் என ஈழமண்டல சதக நூல் பாடிய சைவப் பெரியார் மட்டுவில் ம. க. வேற்…

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# தமிழ் மக்களுக்குத் துரோகம்

—0—0—

## எதிர்காலத்திற் செய்யவேண்டியதென்ன?

திங்கட்கிழமை 14-1-57 பிற்பகல் சுழிபுரம் 'தேவ கோட்டத்தில்' யாழ். கமக்காரர் சங்கத் தலைவர் திரு. நா. சேனாதிராசா அவர்களின் தலைமையில் தமிழ்த் திருநாள் கொண்டாடப்பட்டது. அம்மை அப்பனுக்கு ஆராதனை முடிந்ததும் தலைவர் முன்னுரை கூறும்போது "சேர். பொன்னம்பலம் இராமநாதன் போன்ற தலைவர் இல்லாத காரணத்தால், தமிழர்களது நிலை மிக மிக வருத்தமானதாக விருக்கின்றது. இராமநாதன் அபாயகரமான சூழ்நிலை செய்த சேவையை மறந்து அவரது பரம்பரையினருக்குத் துரோகம் செய்து விட்டனர் இன்றைய சிங்களத்தலைவர்கள். மொழி விஷயத்திலும் சிங்கள ஸ்ரீ விஷயத்திலும் தமிழ் கட்டுப்பாடாக எதிர்ப்பு இயக்கம் நடத்த வேண்டும். தமிழுக்குச் சமஅந்தஸ்துக் கொடுக்காவிட்டால் தமிழரும் சிங்களம் கற்பதையும் கற்பிப்பதையும் தொடர்ந்து பகிஷ்கரிக்க வேண்டும்" என்று கூறினர்.

ஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள பேசும்போது தமிழரின் இன்றைய நிலைமையை எடுத்துக்காட்டி தமிழரின் ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்குக் கையாளவேண்டிய சில குறிப்புக்களைக் கூறினர். "தேசிய மயம், தேசிய மயம்" என்று பல விஷயங்களிலும் இச்சொல் அடிபடுகிறது. இத்தமிழ்த் திருநாளில் தமிழர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கின்றோம். எம் முன்னே ஒரு சகோதரர் சைவராகவும் மற்றவர் கிறிஸ்தவராகவும் இருக்கின்றனர். கணவன் ஒரு சமயத்தவராகவும் மனைவி இன்னொரு சமயத்தைச் சேர்ந்தவராகவும் பிள்ளைகள் ஒரு சமயமும் மற்றவர்களாகவும் இருப்பதைக் காண்கிறோம். நாம் எவ்வளவு தூரம் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தாலும் நான்கு ஐந்து பரம்பரைகளுக்கு மேல் இவ் வேறுபாட்டைக் காண முடியாது. அஃதும் உத்தியோகத்திற்காகவோ, விவாகத்திற்காகவோ, கல்விபெறுவதற்காகவோதான் இச் சமய மாற்றம் நடந்திருககிறது. அவர்களைக் கலைப் பொக்கிஷங்கள் நிறைந்த சைவத்தின்பேரால் மீட்டும் சைவமே சார்ந்து, "தமிழ் என்றால் சைவம், சைவம் என்றால் தமிழ்" என்பதை வலியுறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

பின்னர் மாதர் சங்கத் தலைவி ஸ்ரீமதி சங்கரப்பிள்ளை சிவானந்தவல்லி அம்மையார் பேசும்போது பெண்கள் முன்னேற்றத்துக்கு வேண்டியது செய்வதோடு பெண்களும் தேசிய இயக்கங்களில் ஈடுபடவேண்டும் என்று கூறினர்.

ஸ்ரீ சண்முகரத்தின சர்மா பேசும்போது தனிச் சிங்களச் சட்டத்தைத் தொடர்ந்து எத்தனையோ சோதனைகள் தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்றன. இவற்றை நாம் கட்டுப்பாடாக எதிர்க்க வேண்டும். தலைவர்களைப்பற்றி நாம்சிந்திக்க வேண்டாம். மகாத்மா காந்தி ஆரம்பித்த 'தனிப் பட்டோர்' சத்தியாக்கிரகத்தை நாமும் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறினர்.

பின்பு கீழ்வரும் பிரேரணைகள் நிறைவேற்றப் பட்டன.

1 சமஅந்தஸ்து கிடைக்கும்வரை தமிழ்ப் பிள்ளைகளுக்குச் சிங்களம் கற்பிக்கக்கூடாது.

2 சிங்கள 'சிறீ' மோட்டார்களைத் தமிழ்ப் பகுதிகளிற் பகிஷ்கரிக்க வேண்டும்.

3 மாசி 4-ந் திகதியைத் தமிழ் தமிழ் மக்களின் துக்க தினமாகக் கொண்டாடவேண்டும்.

4 சனநாயகத்துக்கு விரோதமாக மக்களை நடத்தும் இலங்கைச் சிங்கள இராச்சியத்தி லிருந்து பிரிந்து தமிழ் நாட்டில் தமிழ் இராச்சியம் நடத்தவேண்டும்.

### பாடிகாவலர் தலைவர் மீது குற்றச்சாட்டு

பாடிகாவலர் பகுதித் தலைவர் ஸ்ரீ ஒஸ்மன் டி. சில்வா சிலாபம் சென்றிருந்தபொழுது அரசாங்கத்தைப் பகிரங்கமாகக் கண்டித்தாரென்று அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ ஜே. சி. டபிள்யு. முனசிங்க எடுத்துக் காட்டினர். அது பற்றி விளக்கம் தருமாறு முதல்மந்திரி ஸ்ரீ பண்டாரநாயக அவரைககேட்டிருக்கின்றாராம்.

அரசியல் அலை

# பிரதமர் பிரமித்துவிட்டார்!

—0—

சட்டமறுப்புத் திட்டப்படி

## வெற்றியடைகின்றது!

—:0:—

## 'தனிச் சிங்களம்' இனி ஒதுங்குமா?

தமிழகத்திலே தன்மான உணர்ச்சி ஊற்றெடுத்துப் பாய்கின்றது. தனிச் சிங்களச் சட்டத்தை எவ்வகையிலும் எதிர்த்து விடுவதற்குப் பொதுமக்கள் எதிர் பார்த்த வண்ணமா யிருக்கின்றனர்.

யந்திர (மோட்டார்) உந்து வண்டிகளிலே போட்ட இலக்கத் தகடுகளில் மாற்றஞ்செய்த வீரர்களின் வீறு பிரதமரை பிரமித்துவிடச் செய்துவிட்டது.

"விசை" (பஸ்)வண்டிகள் பெரும்பாலும் தமிழ் எழுத்துக்கள் பொறித்த இலகத் தகடுகளைத் தாங்கிய வண்ணம் வீதிகளில் நடமாடுகின்றன பாடி காவலர் பார்த்தும் பாராதவர்கள் போலவும் ஒன்றும் விபரீதமாக நடைபெறாத எண்ணத்துடன் செயலற்றிருக்கின்றனர்.

சட்டத்தை நடத்துகின்றவர்கள் பொதுசனமே. மக்களைத் துன்புறுத்துகின்ற, நாணமடையசசெய்கின்ற சட்டங்களை எவரும் ஏற்றுக் கொள்ளார். இந்த உண்மையை திரு பண்டாரநாயக நன்குணர்ந்து விட்டார்.

தொடர்ச்சி 5ம் பக்கம்

### புகையிலை உற்பத்தியாளருக்கு ஆறுதல்

—0—

இந்தியாவுக்குப் புகையிலை ஏற்றுமதி செய்வது பற்றி யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தார் முதல் மந்திரியுடன் நடத்திய பேச்சின் விளைவாய் இந்தியாவுக்குப் புகையிலை ஏற்றுமதி செய்ய ஒழுங்கு பண்ணப்படுமென்று குறிப்பிட்டு புகையிலை உற்பத்தி செய்வோருக்கு ஆறுதல் மொழி கூறப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.

### இந்திய குடியரசு தினக் கொண்டாட்டம்

சென்ற சனிக்கிழமை இந்திய குடியரசு தினக் கொண்டாட்டம் தெல்கிமா நகரிலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் சிறப்பாக நடைபெற்றது. வாழ்த்துச் செய்திகளும் பல பாகங்களிலுமிருந்து வந்ததாகவும் கூறப்படுகின்றது. இலங்கையில், கொழும்பிலும் கண்டியிலும் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ். துர்முகி ஹூ தைமீ ௧௯ ௨ வெள்ளிக்கிழமை


## அடிமைத் தளையை விடுதலை என்று சொல்லலாமா?...

ஆங்கிலேய ஆதிக்கம் ஈழநாட்டிலிருந்து விலகியதுண்மை. புறநாட்டரசு பன்னூற்றாண்டுகளாக இலங்கையிலிருந்த பின் விலக வேண்டியதற்குக் காரணங்கள் பல உள்ளன. அவற்றை இங்கே நாம் எடுத்தாராயவேண்டியதில்லை. ஆனால் மேனாட்டாதிக்கத்துக்குப் பதிலாக இங்கு தோன்றிய ஆட்சி பொதுமக்கள் யாவருக்கும் பொருந்தியதாயமைந்ததா என்பதைப்பற்றிக் குறிப்பிட வேண்டிய தவசியமாகின்றது. பல்வேறு சாதியினர் சமயத்தினர் வாழ்ந்துவரும் நாட்டில் சிலருக்கு உரிமைகள் வழங்கப்படாத பெருங்குறை பொதிந்ததாகவே இலங்கையின் சுய அரசுச் சட்டதிட்டம் சிறுபான்மையினரின் விருப்பத்திற்கு மாறாக நடைமுறையில் வந்தது. அதன் பின்னர், படிப்படியாகப்பெரும்பான்மைத் தலைவர்களின் மனப்பான்மை தனி ஆதிக்கத்தை நாடிய வண்ணமாக வெளிப்படையாகக் காணப்பட்டது. இதன் விளைவாகவே இப்பொழுது இந்நாட்டில் மக்கள் விடுதலையடைந்தவர்கள் போலல்லாது அடிமைத் தளையை அகற்றுவதற்கு முயன்று வருபவர்களாகக் காணப்படுகின்றனர். இந்தச் சந்தர்ப்பத்திலேதான விடுதலைத்தினம் என்பது வேடிக்கையாகவும் விபரீதமாகவும் ஆண்டுக்காண்டு தோற்றம் அளிக்கின்றது.

அந்நியரின் ஆட்சி அகன்றுவிட்டதென்பது அகமகிழ்ச்சியைச் கொடுப்பதொன்றாயினும் அத்தகைய களிப்பை மறைக்கக்கூடிய ஆற்றொணாத் துயரத்தை உண்டுபண்ணும் வகுப்புவாத ஆட்சி நிலவுகின்ற நிலைமையிலே இலங்கை மக்கள் இப்பொழுதும் ஏதோ ஒரு வகையில் அடிமைகளாகவே அல்லற்படுகின்றனர் என்பதுவெளிப்படையான உண்மையன்றோ?

விடுதலை என்ற பெரும் பேற்றை ஒருநாடு பெற்றிருக்குமேயானால் ஆங்கு மக்களுக்கிடையில் வேற்றுமையும் விபரீதமும் இருக்க வேண்டிய அவசியம் எங்கே? ஆட்சியாளர்களுக்கும் பொது சனங்களுக்கும் சமரச ஒற்றுமை யில்லாத நிலைமை தோற்றுவதற்கென்ன நியாயம்? மொழிப்பிணக்கும் மதத் தகராறும் இன்ன பிறவும் காணப்படும் கவலைக்கிடமான சூழ்நிலை எதற்காக உண்டாகின்றது? உண்மையிலே விடுதலை என்ற பயனை இந்நாட்டு மக்கள் அனைவரும் பெறவில்லை என்பதை யார்தான் மறுப்பர்? உலக ஒப்பாசாரத்துக்காக விடுதலைத்தினத்தை கொண்டாடும் மனநிலைமைதானும் மக்கள் பலரிடத்தில் இல்லாமற் போய்விட்டதென்றால் ஆட்சியாளர் பொருளையும் பொன்னையும் பொழுதையும் விரயஞ்செய்து வேடிக்கை பார்ப்பதன் நோக்கமென்ன? நாட்டில் அமைதி நிலவுவதற்காக, மக்கள் மத்தியில்சமரசமனப்பான்மை உண்டாவதற்காக, ஏற்றம் தாழ்வு என்ற பேதமில்லாத நீதி வழங்குவதற்காக என்றும் உள்ள உரிமைகள் அத்தனையும் எல்லாருக்கும் உரியதான கொள்கை செயல்முறையில் வருவதற்தாக ஆட்சியாளர் நன்முறையில அரசு நடத்திப் பெரும்பயனை விளைவித்தாலன்றி விடுதலை என்ற உணர்ச்சி தோற்றுமா என்று நாம் கேட்கின்றோம். கானலை நீரென்று காரியமறிந்தவர்கள் கூறமாட்டார்கள். பண்டாரநாயக அரசாங்கம் உண்மையை உணர்ந்து நீதியையும் நியாயத்தையும் நிலைநிறுத்த இப்பொழுதென்றாலும் முயற்சி செய்யமாட்டார்களா?

O

## பாரத நாட்டைப் பார்த்துப் பழகுங்கள்

சென்ற சனிக்கிழமை இந்திய குடியரசுத் தினம் உலகெங்கும் உணர்ச்சியுடன் கொண்டாடப்பெற்றது. முந்நூறு கோடிக்கு மேற்பட்ட மக்கள நல்ல வண்ணம் வாழ்கின்றார்கள் ஒரு பெரும நாட்டில் என்றால் ஆங்குள்ள ஆட்சி முறையை யார்தான் வியந்து நயக்க மாட்டார். அன்னியரின் ஆட்சியை அகற்றுவதற்கு பன்னெடுங்காலம் பாரதப் பண்பாட்டின் சீரிய நெறியில் நின்று உண்மை ஒழுக்க வழியினின்றும் ஒரு சிறிதும் பிறழாது காந்திப்பெரியார் போன்ற உத்தமர்களின் தலைமையில் நடந்த ஆத்மசக்திப் போராட்டம் அளித்த வெற்றியும் விடுதலையும் அறநெறி வழி வந்தனவாகையாற் பாரத நாட்டுக் குடியரசுத் தினம் பாருக்கே பெருமையைக் கொடுக்கும் புகழுடையதாகின்றது. மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற் கேற்ற ஆட்சி முறையையே குடியரசுக் கொள்கை குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றது என்பதை ஈழநாட்டு அமைச்சர்கள் அறிந்துணர்வார்களாக? வாழ்க பாரத நாடு! வாழ்க மக்கள் ஆட்சி முறை!!.

=O=

## காந்திப் பெரியார் காட்டிய வழி

உலகியலில் உண்மை நெறிக்கு உயர்ந்த இடத்தைக் கொடுத்த அரசியற்றலைவர்களிலே தலைசிறந்து விளங்கிய, விளங்குகின்ற காந்தப்பெரியாரை மனிதகுலம் ஒருபொழுதும் மறக்கமுடியாது. பிறந்ததினம், இவ்வுலக வாழ்க்கையை நீத்த நாள் என்ற குறிப்பிடப்பெற்ற காலங்களிலே மட்டும் அன்றி எப்பொழுதும் நினைவில் நின்று நிலவுகின்றது காந்திநாமம்; காரணம். உண்மை ஒழுகக நெறியில் நின்று உலகுக்கு வழிகாட்டிய உத்தமர் அவர். ஆகவே அன்னார் பன்னாட்பழகி நன்மையுடன் கையாண்ட சத்தியாக்கிரகம் என்னும் சத்திய நெறியைக் கையாள நினைக்கின்றவர்கள் கையாளுகின்றவர்கள் அத்தகைய விரதத்தை மேற்கொள்வதற்கு வேண்டியன எவை என்று அப்பெரியார் உபதேசித்த ஒழுக்க நெறியை நன்கு அறிந்து உணர்ந்து செயலாற்றுவதே அவர்கள மகாத்மாவுக்கு அளிக்கும் மகத்தான நன்றியாகும்.

## வாழ்க்கை வானில்

— வானதி

### அமைதியான அரசாங்கம்! —ஆனால் ஆர்ப்பாட்டம்?

பண்டாரநாயக ஆட்சியைப் போற் பண்பாடுள்ள ஆட்சி இல்லையாம்! என்ன பரிதாபம். படுகொலைப் பண்பாடு. கொலை நாகரிகம், சாதித்துவேஷச் சால்பு, சமய விரோதக்கலாச்சாரப், இவ்வளவா? வேலை நிறுத்தம் சட்ட மறுப்பு முதலியன பல. ஆயுள்வேதக்கல்லூரிமாணக்கர்கள் சத்தியாக்கிரகஞ் செய்து பாடிகாவலராற் கைதுசெய்யப்பெற்றுவிளக்கமறியலிலும் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு ஆர்ப்பாட்டமும் போதாதா — அமைதி நிலவுகின்றதென்பதை நிரூபிப்பதற்கு? இது கொழும்பில். வடக்கிலும் கிழக்கிலும் மத்திய பகுதிகளிலும் நடக்கும் சட்ட மறுப்பைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

### கல்வி அமைச்சரின் புதுப் பல்லவி

சிங்களச் சிறீயில் ஒரு கீறு அல்லது ஒரு குற்றுத்தானும் மாற்றவிடமாட்டேன் என்று கங்கணங் கட்டிய கல்வி மந்திரியார் இஸ்லாமியருக்கும் தமிழர்களுக்கும் இடையில் வேற்றுமையயுண்டாக்கிப் பாடசாலைகளையும் வெவ்வேறாகப் பிரித்து அமைக்க வேண்டும் என்று யோசனை கூறுகின்றாராம்! அப்படியானால் சிங்கள சிறீயும் தமிழ் எழுத்துக்களும் மோட்டார் வண்டிகளின் இலக்கத் தகடுகளில் ஏன் வெவ்வேறாக இருப்பதற்கு திரு. தகநாயக முயற்சி செய்யாமலிருக்கின்றார்.

அணிந்துரை அரங்கம்

### செந்தமிழ்ப் பூம்பொழில்

ஆசிரியர் :
தமிழ்ப்புலவர் பண்டிதர் வ. மு. இரத்தினேசுவரஐயர்.
20, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பிரதி விலை: 1 ரூ. சதம் 50.

பன்மொழிப் பயிற்சியும் சமயநூற்றெளிவும் அமைந்த பண்டிதர் அவர்கள் சொல்லாட்சி பொருளாட்சி பொருந்த இவ்வெளியீட்டை இயற்றியிருக்கின்றனர்.

"கல்வி வளர்ச்சிக்கும் உள்ளக்கிளர்ச்சிக்கும் காரணமான சில சரித்திரப் பாக்களுடன்" பன்னிரண்டு கட்டுரைகளைக் கொண்டு, திரு. சு. நடேசபிள்ளை, திரு. கு. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை ஆகிய அறிஞர்களின் ஆசியுடன் வந்திருக்கும் இவ்வெளியீட்டைக் கல்வி உலகு வரவேற்று ஆதரிக்குமென்று நம்புகின்றோம்.

நேயர்கள் நெஞ்சம்

## பொங்கல் விழாவில் சமய நிந்தனை

"அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்கம்" யாழ்ப்பாணக் கிளையின் ஆதரவில், சென்ற 14-1-57 திங்கட்கிழமையன்று, யாழ். நகர மண்டபத்தில் "பொங்கல் விழா"க் கொண்டாடப்பட்டது. மேற்படி விழாவில் பல அறிஞர்கள் பேருரை நிகழ்த்தினார்கள். பகுத்தறிவு இயக்கக் கிளையின் "பொங்கல் விழா"வுக்காக, இந்தியாவிலிருந்து தோழர் டி. கே. சிறீனிவாசன் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். அன்பர் ஸ்ரீ டி. கே. சிறீனிவாசனுடைய பேச்சைக் கேட்பதற்காக, மிகுந்த ஆவலுடன் மக்கள் திரண்டிருந்தனர். கடைசிப்பேச்சாளராகவே அவர் பேச இடம் கொடுத்தார்கள். அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தபடி இனிமையாகப் பேசிய தோழர் சிறீனிவாசன் சமய நிந்தனை, புராண இதிகாச நிந்தனைகள் செய்து, பொங்கல் விழாவின் புத்துணர்வைச் சின்னாபின்னப் படுத்தினார்கள். பகுத்தறிவு இயக்கப் பண்பைப் பரிகசிக்கச் செய்தார். ஆனால் இவ்விதமான ஒரு சம்பவம் எப்போது? எங்கே? எதற்காக? யார் யாரால்? நடத்தப்பெற்றது என்பதை எண்ண இதயம் கலங்குகின்றது. என்னே!

"உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார் — மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்"

என்னும் பொன்னான கருத்தைப் போற்றி வளர்க்கும் உழவர்கள் — தங்களது உழைப்பின் பயனைக் கண்டு உவகை பொங்க — உணர்ச்சி பொங்க தெய்விக வழிபாடாற்றும், நன்னாளாகத் தெரிந்தெடுத்த 'தை' முதல் நாளில் — தைப் பொங்கல் திருநாளில்தான் - சமயநிந்தனை நடைபெற்றது என்பதை வருத்தத்தோடுதான் குறிப்பிட வேண்டியிருக்கின்றது.

### "காலம் மாறுகிறது"!

தோழர் டி. கே. சிறீனிவாசன் அவர்கள் அமோகமான வரவேற்புக்கிடையில் பேசத் தொடங்கினார். "ஈழத்திலே தமிழர்கள் வாழ்கிறார்கள்" என்றுதான், முன்பு அறிந்ததாகவும் — ஆனால் இங்கு - தமிழர்களுடன் - தமிழ் மொழியும் அதுவும் - ஒரு உரிமையுடன்) வாழ்கின்ற சிறப்பினைக் கண்டு சந்தோஷசப்படுவதாகவும் மிக இனிமையாகப் பேசினார்கள். தொடர்ந்து பேசும்போது, "காலம் மாறுகிறது - மக்களும் மாறித்தான் ஆக வேண்டும்" என்னும் கருத்தை வெளியிட்டார். இந்தியாவிலே 10 பேர்களுடன் ஆரம்பமான திராவிடமுன்னேற்றக் கழகம் இன்று 1 1/2 இலட்சம் அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு மாபெரும் இயக்கமாக இருக்கிறது என்று எடுத்துக் காட்டிவிட்டு, தி. மு. கழகம் ஒரு வகுப்பு வாதக் கட்சி என்று இங்கெல்லாம் தங்களைப்பற்றி - தங்கள் கழகத்தைப்பற்றி - தவறாகப் பிரசாரம் செய்பவர்களைப்பற்றி மிக வருந்திவிட்டு - கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் என்று, தங்களை மக்கள் எண்ணுகிறார்கள்" என்றும், கடவுள் நம்பிக்கையுள்ளவர்களும் தங்களது தி. மு. கழகத்தில் இருக்கிறார்கள் என்றும், ஆனால் கடவுளின் தத்துவங்களை விளக்குகின்ற நூல்கள் ஏடுகள் என்பனவற்றை விளங்கிக்கொள்ள முடியவில்லையென்றும், இதுபற்றி கடவுள் பத்தர்களிடம் கேட்டதற்கு எங்கள் அப்பா சொன்னார் - அவர் சொன்னார் என்று கூறுகிறார்கள் என்றும், முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களை, எந்தப்பகுத்தறிவாளன் தான் ஏற்பான்......? என்றும், கடவுளைப்பற்றி நான் இப்படிப் பேசுகிறேன் - அந்தக் கடவுள் என்னைப் பேசாமற் செய்யட்டும் - எனது சக்தியை முறியடிக்கட்டும்...... என்றும் "பகுத்தறிவு" என்பதின் பேராலேயே, தாம் இப்படிப் பேசியதாகவும் கூறி ஆஸ்திக அன்பர்களது உள்ளம் நோகப் பேசினார்கள்.

### எதை நம்புவது...? எதைக் கொள்ளுவது...?

தோழர் டி. கே. சிறீனிவாசன் அவர்கள் மேலும் பேசும்போது, பல கிண்டல்களும கேலிகளும்செய்தார். பொங்கல் விழாவிலே பேசுதற்கு முன் வந்த இவர்- பொங்கல் விழாவின் புனிதத் தன்மையை விளக்குவார் - அன்றி - உழவுத் தொழிலின் உயர்வை உணர்த்துவார் - அன்றி உழைப்பாளியின் மகத்துவத்தை உரைப்பார் என்று எதிர்பார்த்திருந்த என்ன

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# பிரிவதைவிட வேறு வழியில்லை

## தமிழ் இராச்சியம் அமைத்தே இனி நாம் வாழலாம்

இலங்கைத்தீவு, 400 நானூறு வருடகாலம், போர்த்துக்கேயர் டச்சுக்காரர், ஆங்கிலேயரான, ஐரோப்பியரின் ஆட்சியிலிருந்து, அவர்களின் சட்டங்கட்குட்பட்டு, அடிமை நாடாயிருந்து, இப்போது சுயராச்சியம் என்று ஒரு போலி இராச்சியமாய் ஏற்பட்டு, தமிழ்பேசும் மக்கட்கு சுயராச்சியத்தில் ஒரு மாகாணி நன்மைதானும் ஏற்படாது, கூடிய தொகையினரான சிங்கள மக்களின் இராச்சியமே நடந்து வருகின்றது. சுயராச்சியம் பெறுவதற்குத்தமிழ்த் தலைவர்கள்செய்த அரசியல்தொண்டுகள் கணக்கிலடங்கா. அதை மறந்து பெரும்பான்மையோரான சிங்களவர், தமிழ் மக்களுக்கு இலங்கையில் ஒருவிதமான சுயாதீனமுமில்லை, இலங்கை சிங்கள மக்களுடையதென்று தீர்மானித்து ஆட்சி செய்கிறார்கள். உலகிலுள்ள நாடுகளில் பல பாஷைகளும் பல சமயங்களுமிருந்தும், அந்த நாடுகளில் எல்லாப் பாஷைகளையும், எல்லாச் சமயங்களையும் அனுசரித்து இராச்சிய பரிபாலனஞ் செய்கின்றார்கள். இங்கே இரண்டு சாகியத்தார்—தமிழர் சிங்களவர். இரண்டு பாஷை — தமிழ் சிங்களம். இப்படியிருந்தும அரசகரும மொழியாகச் சிங்களத்தை மாத்திரம் ஆக்கிக்கொண்டார்கள். தமிழிற்குச் சம அந்தஸ்து இல்லையென்று தீர்த்துவிட்டார்கள். பரம்பரையாய்த் தமிழ் பேசும் மக்கள் குடியிருக்கும் இடங்களிற் சிங்கள மக்களைக் குடியேற்றுகின்றார்கள். தமிழ்ப் பிள்ளைகட்கு உத்தியோகம் இனி இல்லையென்று செயலில் காட்டுகின்றார்கள். காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலை தமிழ்நாட்டிலிருப்பதால மற்றச்சூளை போடமறுத்து விட்டார்கள். எந்தச் சொந்த இயந்திர வண்டிக்கும் சிங்களச் சிறி போடும்படி இராச கட்டளையிடுகிறார்கள். தமிழ்பேசும் மக்கள் ஆங்கில இராச்சியத்தில் உத்தியோகம் பெற்று, இன்றுவரை இருப்பவர்களையும் சிங்களம் படிக்க வேண்டும். அப்படி இல்லையேல், பதவியினின்று வயசு வருமுன் இளைப்பாற வேண்டுமாம(சிஙகள)ம. மூ. அரசாங்கத்தின் கட்டளைப்படி நடவாவிட்டால் வயிற்றிலும் அடித்து, மறியற்சாலைகட்கும் தமிழரை அனுப்பத் தீர்மானித்துவிட்டார்கள். கிற்லர் முசோலினியின் ஆட்சி நடாத்துகிறார்கள் சிஙகளத் தலைவர்கள். தமிழ்ப்பேசும் மக்கட்கு இவ்விலங்கைத்தீவில வாய்ப்பூட்டுச் சட்டம் கைப்பூட்டுச் சட்டம் செய்கிறார்கள். சுயராச்சியம் பெற்று பத்து வருடகாலம் தமிழராயுள்ள நாம் ஒருவிதமாய் ஒத்துழைத்தோம். எப்படி நாங்கள் ஒத்துழைத்தாலும் எங்களுக்கு ஒருவித மான நன்மையும் ஏற்படாது. ஆனதால் தமிழ் நாடாய், தமிழ் இராச்சியமாய் பிரிவதை விட வேறு வழியில்லை" இதைத் தமிழ்த் தலைவர்கள் சிந்தித்து ஆவன செய்யவேண்டும். இல்லையேல் தமிழ் மக்களின் கதி அதோகதியாகும்.

திரு. நா. சேனாதிராசா
யாழ். கமக்காரர்சங்கத் தலைவர்

# படித்தவர் என்பவர் யார்

—:o:—

## பட்டம் பெற்றவர் என்பது தவறு

—o—

### வேலையில்லாத் திண்டாட்டப்பற்றி ஸ்ரீ பிரசாத் அவர்களின் அறிவுரை

—0—0—

கல்கத்தா பல்கலைக் கழக நூற்றாண்டு விழாவில் இந்தியசனாதிபதி கலாநிதி இராசேந்திர பிரசாத் அவர்கள் பேசும்போது நேரான உயர் நோக்குடன் கல்வி கற்பிக்கும்முறை, வளர்ச்சியடைவதற்குப் பல்கலைக் கழகங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். பல் வேறு கலைகளுக்கு மனுச் செய்துகொள்ளும் அபேட்சகர்களின் தகுதியைச் சோதித்துத் தேர்ந்தெடுப்பதற்கு வேறு ஏதாயினும் புதிய முறை கண்டு பிடிக்க வேண்டும்.

இதற்குப் பரவல் முறையில் விஞ்ஞானத்திற்கும் தொழில் நுணுக்கக் கல்விக்கும் அதிக கவனம் செலுத்துவது தேவையாகின்றது. அதே நேரத்தில் உயர்தரக் கல்வி பயில ஆர்வம்காட்டும் மாணவர்களுக்குப் பல்கலைக் கழகங்கள் அதிகமான வசதிகள் செய்து தரவேண்டும்.

வேலைக்காகவே படித்துத் தங்கள்காலத்தை வீணாக்குவதையும் பின்னர் வேலை கிடைக்காமற் போகும்பொழுது வாழ்க்கையில் சோர்ந்து போய் விடுவதையும் போக்குவதற்கான வழி என்ன?

படித்தவர்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கான வழி என்ன என்பதுபற்றி திட்டம் எதுவும் தயாரித்துக் கூறிவிட முடியாது.

படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் உச்சநிலையை அடைந்துள்ளது. இதைப்போக்க மாணவர்களை வடிகட்டி எடுத்து வேலைக்காகப் படிப்பவர்களை ஒரு பக்கமும், கல்விக்காகவும் ஆராய்ச்சிக்காகவும் படிப்பவர்களை வேறுபக்கமும் திருப்பி விட்டால்தான் முடியும் என்று நான் கருதுகிறேன்.

படிப்பாளி என்றால் அவன் பல்கலைக் கழகப் பரீட்சை எழுதிப் பட்டம் பெற்றவன் என்ற கருத்து நிலவுகிறது.

கல்வியின் தரம் குறைந்திருக்கிறது என்பது ஒரு புறமிருக்க, இத்தகைய சோதனைகளினால் கல்வித் திறமைக்கு அத்தாட்சிப் பத்திரம் அளிக்கும் முறை பல சமயங்களில் பலன் அளிக்கவில்லை. ஆகவே தான் ஒரு சிறிய வேலைக்கு பெரிய பட்டப் படிப்புத் தேவையில்லாமல் இருக்கலாம். அந்த வேலைக்குப் பட்டப்படிப்புப் பெற்றவர்கள் மனுச்செய்வது கண்டு வியப்படைய வேண்டியதில்லை.

தகுதியற்றவர்களை வடிகட்டி அனுப்பும் தாபனமாக விளங்கவேண்டிய பல்கலைக் கழகங்கள், அப்படியில்லாது போய்விட்டன. ஆகவே இன்று நாட்டிலுள்ள ஏராளமான பட்டதாரிகளைவைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் கல்வித் துறை நிபுணர்களும் அரசாங்கத்தினரும் திகைக்கின்றனர். மூதாதையரின் பழக்க வழக்கங்களையும், செய்துவந்த தொழில்களையும் கைவிட்டு மேலெழுந்தவாரியான கல்வியைக் கற்றுவிட்டு வேலை கிடைக்காதபொழுது அவர்கள் ஏமாற்றமும் சோர்வும் அடைகின்றனர்.

விஞ்ஞான தொழில் நுணுக்கப் பதங்களை வெளியிடுவதற்குச் சரியான சொற்கள் இந்திய மொழிகளில்இல்லையென்றும் அந்த இந்திய மொழிகள் வளமடையவில்லையென்றும், ஆகவே அன்னிய மொழியே போதனு மொழியாக நீடிக்கலாமென்றும்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# மாணுக்கர் மதிவள மன்றம்

## பெரியபுராண வசனம்

### சுந்தரமூர்த்திநாயனார் புராணம் II

சென்ற பாடத்தில் பெரியபுராணத்தின் வரலாறு பற்றியும், சுந்தரமூர்த்தி நாயனாரின் அவதாரம், இளமைக்காலம், அவர் இறைவனால் தடுத்து ஆட்கொள்ளப்பட்டமை என்பனபற்றியும்படித்தீர்கள். இன்று நாயனார் யாத்திரை புரிந்த தலங்கள், ஆங்காங்கு நடந்த அற்புதச் செயல்கள் என்பன பற்றிப் படிப்போம்.

### என்னை நீ அறியாயா?

நாயனார் பின்னர் பல தலங்கள் சென்று திருப்பதிகங்கள் பாடியருளினார். திருவதிகை அப்பர் உழவாரப் பணி புரிந்த தலம். அங்கு சென்று ஒரு மடத்தில் துயின்றார். விருத்தப் பிராமணரும் ஒருவர் துயில் புரிந்தார். அவர் சுந்தருடைய சிரசிலே தமது பாதங்கள் படத் துயில்பவர் போலக் காட்டியருளினார். "ஏன் காணும் என் சிரசின்மேற் காலை வைத்தீர்" எனக் கேட்டார் சுந்தரர். ஐயர் "மூப்பினாற் தெரியாமற் புரிந்து விட்டேன்" என்னச் சுந்தரர் வேறு க்கந் திரும்பிக் கிடந்தார். அங்கும முன்போலவே பாதம் நீண்டது. நீர் யாவர்? என்றார் சுந்தரர். "என்னை நீ அறியாயா?" என்று இறைவன் மறைந்தருளினார்.

தம்மை மிதித்தவர் கடவுளென்றறிந்து துடித்தெழுந்தார் சுந்தரர். 'தம்மானை யறியாத சாதியாருளரோ' என்னும் பதிகம் பாடினார்.

பின்னர் சிதம்பரசபாநாதரை வணங்கிப் பதிகம் (10 பாக்கள் அடங்கியது) பாடிக் கொண்டு திருவாரூரை அடைந்தார். வன்மீக நாதர் திருவாரூர் மக்களுக்குப்பணித்தபடி அவர்கள் நாயனாரை வணங்கி வரவேற்றனர். அவர் அவர்களை அஞ்சலி செய்து "எந்தையிருப்பது மாரூரவரெம்மையு மாள்வரோ கேளீர்" எனப் பதிகம்பாடிக் கொண்டு ஆலயத்துட்புகுந்தார். அப்பொழுது "உன்னையாட்கொண்ட விவாக நாளில் நீ கொண்ட மணக் கோலத்தைக் கொண்டு விளையாடு" என்று ஒரு அசரீரி எழுந்தது. இதனைக் கேட்ட நாயனார் வன்மீக நாதரை நாடோறும் வணங்கிக் கொண்டு அங்கு இருநதார். அன்று முதல தம்பிரான் தோழர் என அடியார்களால் அழைக்கப் பட்டார்.

### அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள்

திருவாரூரில். உருத்திர கணிகையர்குலத்தில் – உருத்திர கணிகை திருக்கோயிற் றொண்டும் நடனமுஞ் செய்யும் அடியாள்; உதித்தவர் பரவையார். பார்வதியின் சேடி. அப்பொழுது பெயர் கமலினி. சுந்தரர் போலவே புவிக்கு வந்தவர். தினந்தோறும் கோயில் தரிசனம் செய்பவர். எப்போதும்போல ஒருநாட் போனார். கண்டார் நாயனார் பரவையாரை. அவர் மீது புனிதக்காதல் கொண்டார். பரவையாரும் பார்த்தார் சுந்தரரை. சுந்தரம்தான். தெய்வீகக் காதல் கொண்டார். முற்றொடர்பின் விளைவான புனிதக் காதல் இருவர் உள்ளங்களிலும் அலர்ந்தது. இருவரும் இருதயங்களை மாறிக் கொண்டனர். பரவையார் வீடு சென்றார். சுந்தரரோ பரவையாரை மணஞ்செய்து தரவேண்டும் என இறைவனைவேண்டிக் கொண்டு ஆயிரக்கால் மண்டபத்தில் இருந்தார். பரவையும் தோழி மூலம் சுந்தரரை அறிந்து ஆசை கொண்டு புலம்பிக்கொண்டு இருந்தார். ஆண்டவன் அருளின்படி மறுநாள் இருவருக்கும் மணம்நிகழ்ந்தது.

### அடியாரை வணங்கிப் பதிகமருள்வாய்

தம்பதிகள் ஒருநாள் சுவாமி தரிசனத்துக்குச் சென்றனர். மண்டபத்திருந்த அடியார்களை வணங்கிப் பாட விரும்பினார் சுந்தரர். ஆனால் அவர்கள் வரலாறு அறியார். எல்லாமறிந்த இறைவன் "தில்லை வாழந்தணர்" என்று அடியெடுத்துக் கொடுக்க அடியார் ஒவ்வொருவரையும் "அடியேன், அடியேன்" என்று வணங்கித் திருத்தொண்டத்தொகைப் பதிகமருளினார்.

### தண்டமிழ்ப் பாமனும் குண்டையூர்க் கிழவரும்

குண்டையூர்க் கிழவர் என்று ஒரு வேளாளர். நாயனார் மகிமையை அறிந்தார். அதனால் பரவையார் வீட்டுக்கு நெல்லும்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## மாணுக்கர் மதிவள மன்றம்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பிறவும் நெடுங்காலம் அனுப்பி வந்தார். ஒரு கால் மாரி வளங்குன்றி விளைவின்றி அனுப்ப நெல்லின்றிக்கவலையடைந்தார். "சுந்தரனுக்கு அனுப்பத் தந்தோம் நெல்லு" என இறையருள்புரிந்தது. குபேரன் மூலம் குண்டையூர் முழுவதும் நென்மலைகலைகளாயின. கண்டதிசயித்த குண்டையூரர் அதனைக் கொண்டு போக முடியாமையைக் கண்டார். ஓடிப்போனர் சுந்தரமூர்த்திக்கு இதனைச் சொல்ல. முன்னரே அறிந்து கொண்ட சுந்தரரும் வந்தார். வழியிற் கணடு வணங்கிக் குண்டையூரர் சொன்னர் சங்கதியை. நாயனர் "இதற்கு ஆளும் அவரேதான் தருதருதல் வேண்டும் என்று அண்மையிலுள்ள திருக்கோளிலிக்குச் சென்று,

"நீள நினைந்தடியே னுமை
நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்
வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான்
குண்டை யூர்ச்சில நெல்லுப்
பெற்றேன்
ஆளிலை யெம்பெருமான் அவை
அட்டித்தரப் பணியே."

என்று பதிக மருளினர். பூத கணங்கள் இறையருளால் திருவாரூரை நென்மலையால் நிறைத்து விட்டன. மக்கள் மகிழ்ந்தனர். "தங்கள் தங்கள் எல்லையிலுள்ளநெல்லை எடுக்கலாம்" னப் பறையறைவித்தார் பரவையார்.

—வளரும்.

## படித்தவர் என்பவர் யார்?

—0—

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

சிலர் வலியுறுத்துகின்றனர். தேவை ஏற்படும் பொழுது தானகவே அதற்கு வேண்டியதைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற நிலையும் ஏற்பட்டுவிடும். அந்த முறையில் தேவை ஏற்படும் பொழுது தானகவே அதற்கு வேண்டியதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நிலையும் ஏற்பட்டுவிடும். அந்த முறையில் தேவை ஏற்படும் பொழுது இல்லாத சொற்களைக் கண்டுபிடித்து நாளடைவில் அந்த மொழிகள் வளர்ச்சி யடைந்து விடும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

அடுத்த சில ஆண்டுகளில் நம்முடைய மொழிகள் நல்ல வளர்ச்சி அடைந்துவிடும். மற்றநாடுகளிலுள்ள மொழிகள் அந்நாடுகளின் பல காரியங்களுக்குப் பயன்படுமளவு இந்திய மொழிகளும் பயன்படுவது அதிக தூரத்திலில்லை என்றுநான் திட்டவட்டமாக நம்புகிறேன். இது அரசியல் பிரச்சினையல்ல. நம்முடைய வாழ்க்கையுடன்கலாசாரத்துடன் இணைந்த பிரச்சினையாகும் என்று குறிப்பிட்டார்.

## ஏழாலை அரசினர் பாடசாலை பெற்ருர் ஆசிரியர் சங்கம்

ஏழாலை அரசினர் சிரேஷ்ட பாடசாலை பெற்ருர் ஆசிரியர் சங்கத்தின் பொதுக்கூட்டம் 8-1-57 செவ்வாய்க்கிழமை பிற்பகல் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருவாளர் ஈ வி. ஜெ. ஹென்ஸ்மன் அவர்களின் தலைமையில் கூடியது ஆரம்பத்தில், முன்னர் அதிபராக இருந்து காலஞ்சென்ற திருவாளர் கா. தில்லையம்பலம் அவர்கள் பாடசாலைக்குச் செய்த சேவைகளைப் பற்றிப் பலராலும் எடுத்துரைக்கப்பட்டு அன்னரின் உருவப்படமொன்றைப் பாடசாலையில் நிறுவ வேண்டுமென்றும், தங்கள் அனுதாபத்தை அவரின் குடும்பத்தாருக்கு அறிவிக்க வேண்டுமென்றும் சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்தபடியாக பாடசாலையில் "சிங்கள ஆசிரியர்களை நியமித்தல்" என்னும் வித்தியாபகுதியாரின் சுற்று நிருபம்பற்றி ஆலோசிக்கப்பட்டது. "தமிழுக்குச் சிங்களத்துடன் சம அந்தஸ்துக் கொடுக்கப்படும்வரை இப்பாடசாலையில் சிங்கள ஆசிரியர்களை நியமிக்கவோ சிங்களம் படிப்பிக்கவோகூடாது" என்னும் பிரேரணை திருவாளர் வில்லியம் யோசுவா அவர்களால் பிரேரிக்கப்பட்டு திருவாளர் எஸ். அம்பலவாணர் அவர்களால் அனுவதிக்கப்பட்டுச் சபையோரின் அங்கீகாரத்தைப் பெற்றது. ஈற்றில் உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றுளது.

## பெரும் தொண்டர் பிள்ளை அவர்கள் பிரிவு



தென் ஆபிரிக்காவில் இடர்பன் நகரில் தமது இல்லத்திலிருந்து ஸ்ரீ ச. மு. பிள்ளை அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்துப் பிரிந்தார் என்னும் செய்தியை அறிந்து வருந்துகின்ருேம்.

தூரதேசமாகிய தென் ஆபிரிக்காவிலிருந்தும் ஸ்ரீ பிள்ளை அவர்கள் ஈழநாட்டிலும் இந்தியாவிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளிற் பெரிதும் பங்குபற்றி வந்துள்ளார். அரும் பொருள்கள்செறிந்த அவருடைய கட்டுரைகள் இந்நாட்டுத் தமிழ்ப் பத்திரிகைகள் பலவற்றிற் பலர் வாசித்து மகிழ்ந்தார்கள். அவர் நூலாசிரியராயும் பத்திராசிரியராயுமிருந்து தொண்டாற்றினர்என்பதும் சிறப்பாகக் குறிப்பிடவேண்டியது.

தென் ஆபிரிக்காவிலிருந்து ஆற்றியஅருந்தொண்டுகளோடமையாது அங்கிருந்தே அவர் இந்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் செய்த சேவை என்றென்றும் போற்றுதற்குரியது. பிறர் இன்புறுவது தாம் இன்புறுவதாகக் கருதி வாழ்ந்த அன்னருக்கு இறைவன் திருவருளால் ஆன்ம சாந்தி உரியதாகின்றது.

## பிரபல சோதிடரின் மறைவு

புத்தூர் ஆதீன குருமரபைச் சேர்ந்தவரும் ஆகம விற்பன்னரும், சோதிட நிபுணரும் ஆகிய பிரமஸ்ரீ சி. சபாரத்தினக் குருக்கள் அவர்கள் தை மாதம் 4-ம் திகதி வியாழக்கிழமை பூச நட்சத்திரத்தில் முல்லைத் தீவைச்சேர்ந்த குமாரபுரம் என்னும் க்ஷேத்திரத்தில் மனைவி மக்கள் கலங்க அம்மையப்பன் திருவடி நீழலையடைந்தார். இறக்கும் போது அவருக்குவயது 50.

இவர் 1927 ம் ஆண்டு முதல் பதினறு வருடங்கள் திருக்கேதீச்சரநாதனை முப்போதும் திருமேனி தீண்டிய பெருந்தவமுடையவர்.

பின் சில காலம் ஆனைக்கோட்டை மூத்தனர்கோயிலிலும் பின்னர் 1945-ம் ஆண்டு முதல் பன்னிரண்டு வருடங்கள் மன்னர் திருவானைக்கூடம் சித்திவிநாயகர் கோவிலிலும் சேவை செய்தவர்.

இக்காலத்திற்ருன் இவர் தம் சொந்த முயற்சியினலேயே, ஆகம சோதிட நூல்களைக் கற்று நிபுணர் ஆனர். சோதிட சாஸ்திரத்தைத் தொழில் முறையிலல்லாது அனுபவக்கண் கொண்டு துருவித் துருவி ஆராயும் ஆர்வம் மிக்கவர். மன்னரிலிருந்த 12 வருட காலத்தில் அப் பகுதிக்குச் சென்ற அரசாங்க உத்தியோகத்தர் எவராயினுஞ் சரி சைவர், கிறீஸ்தவர், மகமதியர் என்ற பேதமின்றி, இவர் கையால் சாதகம் கணிப்பிக்காதவர் இலர் என்றே கூறவேண்டும்.

சென்ற வருடம் வைகாசி விசாகத்தன்று முல்லைத் தீவுக் கணித்தாகவுள்ள 'குமாரபுரம்' என்னும் பதியிலுள்ள முருகனுலயம் திரு. சி. சுந்தரலிங்கம் அவர்களால் திருத்திக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இவரைக் குடும்பத்துடன் அழைப்பித்துக் குடியேற்றினர். ஆனல் விதி சதி செய்துவிட்டது. இவர் தம்மைச் சில மாதங்களாகப் பீடித்து வருத்திய நோய் காரணமாக வியாழக்கிழமை 17-1-57 காலையில் திருக்கேதீச்சரநாதன் திருவடியை அடைந்தார். அவரது பிரிவால் துயருறும் மனைவி மக்களுக்கு எமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கின்ருேம். இறைவனருளால் அவருக்கு ஆன்ம சாந்தியுரியதாகின்றது.

# அகிலஇலங்கைச் சிவனடியார்சபை

—0—

## நான்காவதாண்டு விழா நிகழ்ச்சிகள்

மிகப் பிரசித்தி பெற்றவையாகப் பேசப்படும் சமயங்கள் கிறீஸ்த சமயமும் பௌத்த சமயமுமாம். இச் சமயங்கள் அந்தந்த மதாசாரியர்களால் பரவப் பெற்றுவருகின்றன. ஆனல் ஆன்மாக்கள் பாவ புண்ணியங்களினின்று நீங்கி இறைவன் திருவடியை அடைவதற்கேற்ற மெய்ச்சமயமாகிய சுத்தாத்துவித சைவ சித்தாந்த சமயம்" தமிழ் நாட்டிற்கு அப்பால் பரப்பப்பட வில்லை. இச் சமயம் மேல் நாட்டிற் பரப்புவது கடினம். ஏனென்ருல் இது மிகத் திட்பநுட்பமான கருத்துக்களையுடையது. ஏனைய சமயங்கள் கால இயல்புக்கேற்பப் பரப்புவது சுலபம்.

சைவசித்தாந்தம்மேலைத் தேசத்தில் பரப்ப வேண்டுமென முதல் முதல் அவாக்கொண்ட கீழைத் தேசப் பெரியார்கள் திரு. சபாரத்தினமுதலியார், திரு. சிவபாதசுந்தரனர், திரு. நல்லசாமிப்பிள்ளை முதலானேர் இவர்களுள் திரு. சிவபாதசுந்தரனர் ஆங்கிலத்தில் சைவசித்தாந்த நூல் எழுதி இருக்கிருர்கள். அந் நூல் மேல் நாட்டில் பதிப்பிக்கப் பெற்றது. அந்நூல் அங்கு கல்லூரிகளில் படிப்பிக்கப் படுகின்றது. அந் நூலில் எழுதிய சித்தாந்த உண்மையை அறிந்த மேல் நாட்டுஅறிஞர்கள் சிவபாத சுந்தரத்தைப் போற்றுகிருர்கள். இது நிற்க மணிவாசகப் பெருமான் தம் திருவாசகத்தில் சண்டேசுரர் கண்ணப்பநாயனர் வண்டோதரி யம்மையார் ஆகிய இவர்களைச் சிவனடியார்களெனப் போற்றித் துதிப்பதுபோல் ஸ்ரீ சிவபாதசுந்தரனரும், ஸ்ரீமத் ஞானப்பிரகாச சுவாமிகள் வரலாற்று முகவுரையில் இலங்கையில் ஸ்ரீமத் ஞானப்பிரகாசரையும ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரையும் சிறந்த சிவனடியார்கள் எனப் போற்றியுள்ளார்கள்.

ஆகவே மணிவாசகர் கூறிய அடியவர்களோடு அவருக்குப் பின் வந்த சுந்தரமூர்த்தி நாயனர் தம் காலத்தும் தமக்கு அப்பாற்பட்டகாலத்தும் உள்ள அடியார்களையெல்லாம் திருத்தொண்டத்தொகைப் பதிகத்தில் எடுத்துக் கூறியுள்ளார்கள். இதனைத் தமிழ் நாட்டை உய்விக்க வந்த தெய்வச் சேக்கிழார் பெருமான் அறுபான் மும்மை அடியார்களை ஒன்று சேர்த்து காப்பியருபமாகப் பாடிப் பெரிய புராணமாகத் தந்துள்ளார்கள்.

அதுபோல இலங்கையிலும் சைவ வரலாறு வரன்முறையில் திரு. சிவபாத சுந்தரம் அவர்கள் கூறிய இருஅடியவர்களுடன் இன்னும் பல சிவ நேயச்செல்வர்களையும் சைவப் பெரியார்களையும் பிற்சந்ததியார் அறிந்துணரச் செய்யும் பொருட்டும் இலங்கைச் சிவனடியார் சரித்திரம் ஒன்று எழுதற்கு நாவலரின் திட்ப நுட்பமான கருத்தை யுணர்த்தும் பொருட்டும் அகில இலங்கைச் சிவனடியார் சபை ஆரம்பிக்கப்பட்டது. இதன் நான்காவதாண்டு நிறைவு விழா ஏழாலைத் திருமடத்தில் 19-1-57 சனிக்கிழமை பிற்பகல் அடியார் திருக்கூட்டச் சிறப்புடன் ஆரம்பமானது. விநாயகர், நடேசர் மூர்த்திகட்கும் நால்வர், சேக்கிழாருக்கும் விசேட பூசை நிகழ்ந்ததும், திருவாதவூர்ப் புராணம் படிக்கப்பட்டது. அது முடிந்ததும் மணிவாசகப் பெருமான் வீதிவலம் வந்தனர். இதன் பின்பு இலங்கையிலுள்ள பல சாதுக்களும் மாணவர்களும் பொதுமக்களும் பக்திப் பாடல்கள் பாடினர். வீதிவலம் வந்ததும் அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டது மறுநாட் காலை மண்டபத்தில் விசேட அபிடேகங்களுடன் மகேஸ்வர பூசை நடைபெற்றது. இதில பல சிவனடியார்கள் சந்நியாசிகள், மாணவர்கள் ஆசிரியர்கள், பொதுசனங்கள், பங்குபற்றினர். திருக்கேதீச்சரத்தில் சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம் ஞாபகாச்சிரமம் ஒன்று அமைப்பதாகவும் தீர்மானம் ஒன்று அத்தருணம் செய்யப்பெற்றது.

செ. கோ.

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணபதி.

[ இவ்வாரப் பலன்கள் 3—2—57 —— 9—2—57. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

அளவுக்குக் கூடிய வேலை இந்த வாரம் உம்மீது சுமத்தப்படும். தன லாபம் நிச்சயம். ஆனல் நீர் புது முயற்சிகளை மேற்கொள்ளும்பொழுது உமக்குப் பல இடைஞ்சல்களுண்டாகும். இனத்தவர்களுடன் சண்டைகளைத் தவிர்க்கவும்,

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,**

குடும்பக் கருமங்கள் சீர் கேடாகவே இன்னமும் தொடர்ந்திருக்கும், பெண்ணின நண்பர் உதவியாயிருப்பர். குடும்பத்திற் பிழை எண்ணங்களுக்கும் இரகசியப் பகைவரால் இடைஞ்சல்களுக்கும் இடமுண்டு.

**மிதுனராசி மிருகசீரிடம்; 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

உம்முடைய இடைஞ்சல்களுட் பலவற்றை நீர் இந்த வாரம் நீக்கக்கூடியதாயிருக்கும். பிழை எண்ணங்கள் நீக்கப்படும்; அதுடன் உம்முடைய நண்பர் உமக்கு அதிக உதவியாயிருப்பர். உம்முடைய திட்டங்களை முன்னேற்றவும். ஆனல் தேக சுகத்தைப்பற்றிக் கவனமாயிருக்கவும்.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,**

உம்முடைய சொந்தக் கருமங்கள் ஒழுங்குபண்ணப்படாமல் தொடர்ந்திருக்கும். முதல் நாள் இடைஞ்சலாயிருக்கக்கூடும். சுகவீனங்கள் விசேடமாய் வயிற்றுக் கோளாறுகளுக்கிடமுண்டு

**சிங்கராசி மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.**

எதிரிகள் அழிவுக்கிடமுண்டு. தனலாபமும் நிச்சயம். ஆனல் ஞாயிறு பிற்பகல் திங்கள் செவ்வாய் கவனமாய்க் கழிக்கவேண்டும் வாரமிகுதி திருப்பவும் நன்ருகும்.

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

உம்முடைய இனத்தவர்கள் உமக்கு இந்த வாரம் அதிக உதவியாயிருப்பார்கள் தனலாபமும் நிச்சயம் ஆனல் புதன் வியாழனும் வெள்ளி காலையும் கவனமாய்க் கழிக்க வேண்டும், வாரமிகுதி திரும்பவும் நன்ருகும்.

**துலாம் சித்திரை 3 4ம், பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

புதுக் கருமங்களுக்கு நல்ல வாரம். வேலைகூடுதலாயிருக்கும். ஆனல் போதியளவுக்கு நீர் பதிலுபகாரம் பெறுவீர். இனத்தவர்களுடன் வாரஇறுதியிற் சண்டைகளுக்கிடமுண்டு: வெள்ளியும் சனியும் கவனமாய்க் கழிக்க வேண்டும்,

**விருட்சிகராசி விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.**

உம்முடைய சொந்தக் கருமங்கள் குழப்பமாயிருக்கும், அவற்றை ஒழுங்குபண்ணமாட்டாது வருத்தப்படுவீர். பணத்துறையில் நல்லவாரம். புதுமுயற்சிகள் நல்ல பலனைத் தரும் புகழும் சமூகசித்தியும் நிச்சயம்.

**தனுராசி மூலம் பூராடம் உததராடம், 1ம் பாதம்,**

உம்முடைய சிக்கல்களுட் பலவற்றை நீர் இந்த வாரம நீக்கக்கூடியதாயிருக்கும். நீரே கருமங்களைக் கையாண்டால் கருமங்களை மிக இலகுவாக நீர் ஒழுங்குபண்ணக்கூடியதாயிருக்கும். தனலாபமும் நிச்சயம். ஆனல் தேகசுகம் தொடர்ந்து சிக்கலாகவேயிருக்கும்,

**மகராராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

சுகவீனங்களுக்கிடமுண்டு. மற்றவர்களை விரைந்து பிழையாய் நினைப்பீர். இரகசியப் பகைவரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். வார இறுதியில் தனலாபங்களுக்கிடமுண்டு.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

பெண்ணின நண்பர் இந்த வாரம் அதிகஉதவியாயிருப்பர். உத்தியோக சித்தியும்நிச்சயம். ஆனல் மனச்சமர்தானமிருக்கமாட்டாது. உமக்குக் கீழே வேலை செய்பவர்களுடன் சண்டைகளைத் தவிர்க்கவும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி,**

நல்ல வாரம். தகுந்த சித்தி ஒன்று நீர் அடையக்கூடியதாயிருக்கும். நண்பர் மூலம் இலாபங்களுக்கும் எதிரிகள் அழிவுக்கும் இடமுண்டு. உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்றிக்கோட்டில்
கைதடி நுணுவில் இளையதம்பி வேலுப்பிள்ளை,
வழக்காளி.
வழ: இல. 1194/M,
எதிர்
கைதடி நுணுவில் சின்னத்தம்பி கந்தையா இவர் தனக்காகவும் தனது காலஞ் சென்ற பெண் குஞ்சிப் பிள்ளையின் ஆஸ்தியின் பிரதிஸ்தராகவும்
எதிராளி.

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டு 1194 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி 1957ம் ஆ. பங்குனி மீ 6 ந் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு பின் குறிக்கப்படு மாதனம் அக்காணிகருள் நின்று என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: ரூபா. 1239/=ம், 900/— ரூபாவுக்கு 22-3-56 தொடக்கம் 16-7-56 வரையும் 12 வீத வட்டியும் பின் கூட்டி வரும் தொகைக்கு 17-7-56 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 268-56ம்.

ஆதன விடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மட்டுவில் தெற்கிறை "காரை தாழ்வு" நிலப்பரப்பு 4 1/2 எல்லை கிழக்கு மத வீரசிங்கம் கைம்பெண் வள்ளிப்பிள்ளைக் குரிய வாதனம், வடக்கு இராமசாமி பெண் செல்லம்மாவுக்குரியவாதனம், மேற்கு வல்லிபுரம் பெண் தங்கம்மாவுக்குரிய வாதனம். தெற்கு கைதடி நுணுவில் ஊரெல்லை ஒழுங்கை. இதடக்கலும் இதற்குள்ளிருக்கும் பனைகள் மற்றும் பயிர்வகைகளடங்கலும்,

மு. நா. மார்க்கண்டு
கொம்மிஷனர்.
சாவகச்சேரி,
1-2-57.
M 458 1-2-57 (து 100)

## பெயர் மாற்றம்

கோப்பாய் இருபாலை கிழக்கில் இருக்கும் விஞசி பெரியான் ஆகியநான் இன்றுமுதல் (1-2-57) என் பெயரை விஞசி நித்தியானந்தம் என்று மாற்றிகொண்டேன் என்றும் இனி எப்பொழுதும் வி, நித்தியானந்தம் என்றே கை எழுத்து இடுவேன் என்றும் இத்தால் அறிவிக்கிறேன்.

இப்படிக்கு
வி. நித்தியானந்தம்
இருபாலை கிழக்கு
கோப்பாய்
M. 459 1-2

## அரசியல் அலை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தனிச் சிங்களச் சட்டம் எல்லா மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை யென்பது இப்பொழுது நடக்கின்ற எதிர்ப்பு இயக்கத்திலிருந்து அறியக் கிடக்கின்றது.

## பொங்கல் விழாவிலா சமய நிந்தனை?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ணற்ற மக்கள் "கிணறு தோண்டப் பூதம் புறப்பட்டாற் போன்று"; வளர்ந்து கொண்டுபோன நாஸ்திக விரிவுரையை — திராவிடக் கழகப் பிரசாரத்தைக்கேட்க வேண்டியதாயிற்று. இந்தியாவிலே ஸ்ரீ நேருவின் அந்தஸ்து உயர்ந்திருக்கிறதேயொழிய, இந்தியாவினது அந்தஸ்து உயரவில்லை என்றும், பலகருத்துக்களைக் கூறிவிட்டு, சமய நிந்தனை புரியத் தொடங்கினர்கள். [வளரு

## வண. சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின்

# நினைவு நாள்

### ஸ்ரீ சிவசம்புநாத பண்டிதர் அவர்கள் சூட்டிய புகழ்மாலையின் ஒரு பகுதி

அடிகள் தமிழ் மொழியிலே ஈடும் எடுப்பும் இல்லாத ஒரு சொற்கலைச் செல்வத்தையாக்கித் தந்திருக்கின்றர்கள். அதன் பெரும்பகுதி இப்பொழுது நூல்வடிவில் வெளிவந்திருக்கிறது. அடிகள் நீண்டகால ஆராய்ச்சியின் விளைவாகத் தமிழ்மொழியே உலக மொழிகள் பலவற்றிற்குத் தாய்மொழி யென்றும், உலகத்திலே தோன்றிய மிகமிகப் பழமையான மொழியொன்றிருந்தால், அதுவே தமிழ் என்றும் தமது சொற்பிறப்பாராய்ச்சி நூலில் தெளிவாகக் காட்டியிருக்கின்றர்கள். இற்றைக்கு ஐயாயிர மாண்டுகளுக்கு முன்னே யெழுந்த முழுமுதற்றொல்காப்பியத்திலே,

"மொழிப்பொருட் காரணம்
விழிப்பத் தோன்ற
எல்லாச் சொல்லும்
பொருள் குறித்தனவே"

என்னும் சூத்திரம் ஒன்றுவருகின்றது. அதன் பொருள் யாதெனில் சொற்களின் மூலப்பொருட் காரணத்தை வெளிப்படையாக அறிய முடியாது. ஆனல் எல்லாச் சொற்களும் பொருள் குறித்துக் காரணமுடையனவாய் எழுந்தனவென்பது, என்று அக்காலத்தில் ஆசிரியர் தொல்காப்பியனர் சொற்களின் காரணங்களைத் திட்ப நுட்பமாகக் கூற முடியாதவராயினர். ஆனல அடிகளார் அத்தொலகாப்பியனர் அந்நாளில் செய்யாது விட்ட ஒரு பெரும் தமிழ்ப்பணியை தம வாழ்நாளில செய்து முடித்தார். அப்பணி ஞாயிறும் மதியுமுள்ள காலமெல்லாம் தமிழைப் பெருமைப் படுத்தும சால்புடையதாகும.

அடிகள் தமது நுட்பமான சொல்லாராச்சியின் முடிபாகக் கண்ட பிறிதோருண்மை, தமிழ் மொழியில் ஐம்பதினுயிரத்துக்கு மேற்பட்ட அடிச் சொற்கள் உண்டென்றும், அச்சொற்களின் துணையினுலே எண்ணில்லாத தமிழ்ச் சொற்களைத் தேவை நோக்கி யாகிக்கொள்ளலா மென்றும், அவ்விரண்டு தன்மைகளினுலும் தமிழ் எக்காலத்தும் பிறமொழிகளின் உதவியின்றித் தனித்தியங்கவல்லதென்றும் காண்பாராயினர்.

தமதுசமயத்தையும் செந்தமிழ் மொழியையும் வளப்படுத்த வேண்டி நின்றமையால் அடிகளார் ஆங்கிலம், ஆரியம், இலத்தீன், கிரேக்க மொழி, ஜேமன் மொழி முதலிய பன்னிரு மொழிகளைக் கற்று அவற்றில் நிரம்பிய புலமையெய்தினர். சைவ சமயம், பௌத்த சமயம், மகமதிய சமயம் முதலிய பல்வேறு சமயங்களைப் பற்றியும் அறிந்திருந்தார்.

அடிகள் சரித்திரம் எழுதுவதில் வல்லவர். காரண காரியங்களை யெல்லாம் சீர்தூக்கியாராய்ந்து பார்த்தால் பிறர் முடிபுகளை மறுக்கவேண்டியவிடங்களில் மறுத்தும் தழுவவேண்டிய விடங்களிற் றழுவியும் தாம் கண்ட உண்மைகளைத் தக்க காரணங்காட்டி நிறுத்தியும் எழுதுவது அவருக்கு இயற்கை.

இன்னும் அடிகள் ஆங்கிலத்தில் இருக்கும் தருக்க நூல்களைப் போலவே தமிழிலும் விரிவான தருக்க நூல்கள் இருத்தல் வேண்டும் என்று கருதி 'தருக்க சாத்திரச் சுருக்கம்' என்னும் ஒரு நூல் செய்துள்ளார்கள்.




உ

# ஓர் விண்ணப்பம்

மறவன்புலோவிலுள்ள கோயிலாக்கண்டி சிவன் கோயில் அநேக வருடங்களாகக் கிலமடைந்து பூசை முதலிய நியமங்கள் இன்றியிருக்கின்றது. அதன் தர்ம கர்த்தாக்கள் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாருக்குச் சாதனமூலம் அக் கோயிலின் பரிபாலனத்தை ஒப்படைத்துவிட்டார்கள். இதன் புனருத்தாரணத்துக்கு ரூ. 8000/= வரை தேவை. ஆகவே சைவச் சீலர்கள் யாவரையும் இச்சிவ கைங்கரியத்துக்குத் தங்களாலியன்ற பணவுதவி புரியுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேம்.

த. முத்துச்சாமிப்பிள்ளை,
தலைவர்

முகாந்திரம் இ. பொ. இராசையா,
தனாதிகாரி,

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

ஆ. தனபாலசிங்கம்,
செயலாளர்,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் கன்னுதிட்டி துரையப்பா பத்தர் வேணுகோபால் — வழக்காளி

இல. 10996

எதிராக

1. மாவிட்டபுரம் கனகசபைவீரசிங்கம் ஓவசியர்
2, வெள்ளவத்தை No. 6, 4-ம் ஒழுங்கை வைத்திலிங்கம் நவரெதினமும் பெண்
3. ஜெகதம்பிகையும்,

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டின் 10996 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1957ஹூ பங்குனி மீ 8 உ வெள்ளிக்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகள் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோயிற் பற்று கரையூர் இறை 'கட்டுப்புலம்' கி. பரப்பு. 3½ம், வீடும்; கிணறும் மற்றும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு சோமசுந்தரம்பிள்ளை கணபதிப்பிள்ளையின் ஆதனம். வடக்கு கந்தையாவும், பெண் பூரணத்தின் ஆதனம். மேற்கு ஙியுமென் பெண் நல்லம்மாவின் ஆதனம், தெற்கு ரோட்டு. இககாணி D 210/05 ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

ஷை சுண்டிக்குளிக் கோயிற் பற்று சுண்டிக்குளி இறை கட்டுத் தோட்டமும்' 'கட்டுப்புலமும்' கி. ப. 7 ம் 12 குளியும் D 129/160-ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது. இதில் தெற்கில் பிரிக்கப்பட்ட கி. ப. 2-ம் வான் பயிர் செய் பயிரும், புதுக்கக் கட்டப்பட்ட கல்வீடும், கிணறும், எல்லை கிழக்கு தங்கவேலு பெண் மாணிக்கத்தின் ஆதனம்.

## கோயிலாக்கண்டிச் சிவன் கொயில்

1-ம் பக்கத் தொடர்ச்சி

பிள்ளைப் புலவர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இத்தகையபெருமைவாய்ந்த சிவாலயத்தையாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் புனருத்தாரணம் செய்ய முன்வருகிருர்கள். இவர்களோடுஏனையசைவச்சபைகளும் சைவ மக்களும் சேர்ந்து ஒத்துழைக்குமாறு எம்பெருமான் திருவருள் வழி நின்று சைவ மக்கள் யாவரையும் வேண்டுகிறோம். பெருமான் அருள் புரிவாராக,

"நங்கடம்பனைப்
பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத்
திருக்கரக்கோயிலான்
தன்கடன் அடியேனையுந்
தாங்குதல்
என்கடன் பணிசெய்து
கிடப்பதே"

(அப்பர்)

வடக்கு மிகுதியாக இருக்கும் காணி டாக்குத்தர் சங்கரப்பிள்ளை சந்தியாப்பிள்ளைக்குடையது. மேற்கு அத்தியடி புது ரோட்டு தெற்கு A. பரராஜசிங்கம் பெண் ஜெயராஜனுவின் ஆதனம். இக் காணி D 203/283ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

சே. இரத்தினசபாபதி
கொம்மிஷனர்

51, 4ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்
28-1-57,
M. 457 1-2 (து 200)


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

**1918-ம் ஆ ஸ்தாபிதமானது**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கோடேக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்த ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றததக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூலமாக அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்

Std 14


## கோட்டு விற்பனவு விளம்பரம்

மரணித்தவ ஊர்காவற்றுறை மேற்கு கதிர்காமர் கணபதிப்பிள்ளை கைம்பெண் செல்லமுத்து தானுகவும் சென்ற தனது புருஷன் க. கணபதிப்பிள்ளையின் ஆதனத்துக்கு யாழ்ப்பாணம் டிஸதிறிக் கோட்டில்1703ம் இலக்கத் தத்துவவழக்கில் தத்துவகாரனுகவும்

வழக்காளி

வட்டுக்கோட்டை மேற்கு வேலுப்பிள்ளை சின்னத்துரை

பதில் வழக்காளி

Vs

1 ஊர்காவற்றுறை மேற்கு நாகமுத்து இளையதம்பி
2 ஷை இளையதம்பி கோபாலபிள்ளை
3 ஷை இளையதம்பி தம்பையாவும் பெண்
4 ஷை அன்னப்பிள்ளையும்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸதிறிக்கோட்டின் 11503-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணிகளை 1957 ஹூ பங்குனி மீ 4 உ திங்கட்கிழமை முற்பகல் 11 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 2410-00 ம் இதில் ரூபா 2000 க்கு 6-8-54 திகதி தொடக்கம் 18-11-54 வரைக்கும் வருடமொன்றுக்கு 100 க்கு 12 வீதவட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் 18-11-54 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5வீதவட்டியும்கோட்டுச் செலவுரூ 230-20 இதில் ரூபா 1170 கோட்டில் கட்டுப்பட்டது. கோட்டுச் செலவில் ரூபா 200 கொடுபட்டது.

காணி விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று கரம்பன் இறை பறங்கித் தோட்டம் கிலப்பரப்பு 1 1/2 ம் வீடும் எல்லை கிழக்கு வீரசாமி பெண் செல்வம் வடக்கு கெங்காதரம் பெண் இராசமணி மேற்கு ரோட்டு தெற்கு ஒழுங்கை இதடங்கலும்.

2 மேற்படி இறை சந்தன் வெள்ளிடையும் சந்தன் வெள்ளிடை கொம்மன்ஞுவிற் கொள்விலை கிலப்பரப்பு 2-ம் பனைகளும் எல்லை கிழக்கு யேக்கோப்பிள்ளை சவிரிமுத்து வடக்கு ஒழுங்கை மேற்கு ஆண்டி அரிய புத்திரன் தெற்கு இராமு முத்தச்சாமியும் நாராணசாமி பெண் மீனுட்சி இதடங்கலும்.

3 ஷை இறை சந்தன் வெள்ளிடையும் சந்தன் வெள்ளிடை கொம்மஞ்ஞுவிற் கொள்விலை கிலப்பரப்பு ஒன்றரை (1½)எல்லை கிழக்கு சின்னத்தம்பி மாசிலாமணி வடக்கு கணபதிப்பிள்ளை கைம்பெண் பாக்கியமும் மறுபேபேரும் மேற்கும் தெற்கும் ஒழுங்கை இதடங்கலும் ஆனுல் கிழக்கெல்லைக் காணியில் நிற்கிற தென்னப்பிள்ளைகள் பிறநீங்கல்.

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்
11-1-57
M 455 1-2-57. (து 50)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சரவணை,
வயித்தியாம்பிள்ளை சவிரிமுத்து
வழக்காளி

இல. M B 370

எதிராக

1 நல்லூர் இப்போ சரவணை நாகலிங்கம் கந்தசாமியும்
2 ஷை பெண்வாலாம்பிகையும்

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக்கோட்டின் M B 370-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1957 ஹூ பங்குனி மீ 8 உ வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணி தொடக்கம் அந்தக காணிககுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 4042-50 ம் இதில் ரூபா 3000 க்கு 21-7-55 திகதி தொடக்கம் 4-10-55 வரைக்கும் வருடமொன்றுக்கு 100 க்கு 15 வீத வட்டியும் அதன்மேல் முழுத தொகைக்கும் 4-10-55 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 222-10. இதில் ரூபா 150 கொடுபட்டது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக கோவிற்பற்று சரவணை இறை பீயன்கலடு கிலப்பரப்பு 19 1/2 யும் வீடுகளும் கிணறும் தென்னைகளும் வடலிகளும் மற்றும் செய்பயிர் வான்பயிர்களும், எல்லை கிழக்கு கந்தையா கதிரவேலு, வடக்கு சின்னத்துரை கைம்பெண் தில்லையம்மாவும் மறுபேரும், மேற்கு ரோட்டு தெற்கு தற்போது ஒழுங்கை. இதடங்கலும்,

ஆ ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்
12-1-57.
M 456 1-2-57 (து. 50)

## வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலைப் பெற்ருர், ஆசிரியர், மாணவர் சங்கக் கூட்டம்

மேற்படி கூட்டம் தை மாதம் 5ம் தேதி வெள்ளிக்கிழமை (18-1-57) பிற்பகல் பண்டிதர் சு. இராமசாமி அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. மாணவர்களின் அப்பியாசங்கள் நடைபெற்றன. மாணவர் தேர்ச்சி அறிக்கைகள் வழங்கப்பட்ட பின் தலைவர் பேசும்போது மாணவர்களின் கல்வி விருத்திக்கு, மாணவர், பெற்ரோர், ஆசிரியர், முகாமைக்காரர், அரசினர் ஆகிய ஐந்து திறத்தாரும் ஒத்துழைக்க வேண்டுமெனவும், முதல் மூன்று திறத்தாரது ஒத்துழைப்பும் ஊக்கமுமே சிறந்த ஏதுக்களெனவும், ஆசிரியர் பாடசாலையில் மாத்திரமன்று எவ்வெவ்விடத்திலும் ஆசிரியராகவே நடந்துகொள்ள வேண்டுமெனவும், பெற்ருர், தம் பிள்ளைகளை பெற்று வளர்க்குமளவில் தம்கடன் தீர்ந்ததென எண்ணலாகாதென்றும்கூறினுர். திரு.க. தியாகராசா, திரு. அ. தேவராசா, திரு க. பரமநாதர் ஆகியவர்களுடைய குறிப்புரையுடன் கூட்டம் நிறைவெய்தியது. பின்பு 6 மணியளவில் சைவ வித்தியா விருத்திக்குரிய பிரசங்கங்கள் திருவாளர் மு ஞானப்பிரகாசம் B. A; B. SC, அவர்கள் தலைமையில் நடைபெற்றன. தலைவர் அவர்கள் 'சைவ சமய பரிபாலனம்" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு சைவசமய மாட்சியை விளக்கி, அதை நாம் எவ்வகையில் வளர்க்கவேண்டுமென்பதைப்பற்றி நீண்ட சொற்பொழிவாற்றினர்.

பண்டிதர் சு. இராமசாமி அவர்கள் 'சைவமுந் தமிழும்' என்னும் விடயத்திற் பேசும்போது 'சைவசமயம் தமிழ்மொழியின்உயிராயிருக்கிறதென்றும், தமிழ்மொழியைப் படிக்க முயல்பவன் சைவசமயத்தையே படித்து விடுகிருனென்றும் இதனுல் தமிழ் படிப்பவன் சைவச் சார்புடையவனுகிருன் என்றும், சைவதூஷணம் செய்துவந்த பிறசயம போதகரிற் சிலர் தமிழ்மொழியை ஆராயத் தொடங்கி, தமது சைவ தூஷணையை விட்டதோடமையாது சைவத்தையே பிரசாரஞ் செய்யத் தொடங்கினுர்களென்றும், மேற்கோள்களுடன் பேசினுர். பின்பு பண்டிதர் ச.பொன்னுத்துரைஅவர்கள் 'ஆசிரியர் கடமை' என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு பேசினுர். முகாமைக்காரர் திரு. இ. நாகலிங்கம் அவர்கள் தலைவருக்கும் உபந்நியாசகர்கள் சபையோர் என்பவர்களுக்கும் நன்றியுரை பகர்ந்தனர். பாடசாலை விருந்துடன் கூட்டம் இனிதுநிறைவெய்தியது.

### சிங்கள சிறி எதிர்ப்பின் எல்லை

சிங்களசிறீயையும் தனிச்சிங்களச் சட்டத்தையும் எதிர்க்கும் முறையில் வடக்குகிழக்கு மாகாணங்களிலுள்ள யதநிர உந்து வண்டிகளின் இலக்கங்களுக்கு எதிரில் தமிழ எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு வருகின்றன. உந்துவண்டி ஒன்று தமிழ இலக்கத்துடன் கொழும்பில் உலவியதாம். எதிர்காலத்தில் தமிழ் எழுத்துக்களுடன் கொழும்புப் பகுதிகளில் உந்துவண்டிகள்ஓடிஞல் அவை அரசாங்கத்தாற் கைப்பற்றப்படலாம் என்று முதல் மந்திரி தெரிவித்தாகக் கூறப்படுகின்றது.

### வங்கி வேலைநிறுத்தம் நின்றுவிட்டது

சிலநாட்களாக இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள் வேலைநிறுத்தஞ்செய்து தங்கள் கோரிக்கைகளை விசாரிக்குமாறு கேட்டுவந்தனர். சமரச ஒப்பந்தம்உருவான பின்பு நேற்று மறுபடியும் வங்கியில் வேலை ஒழுங்காக நடைபெறுகின்றது.

வானமுக்ல வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 1-2-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.